தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 8, சித்ரபானு – திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 அக்டோபர் 24, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே

உடம்போ டுயிரிடை நட்பு"

உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு முட்டைக்கும் பறவைக் குஞ்சுக்கும் உண்டான உறவு போன்றதுதான்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. சி. மன்னியப்பன் அவர்கள் 31-12-2001 அன்றும், திரு. வி. பழனிவேல் அவர்கள் 15-05-2002 அன்றும், திரு. கோ. பாரதிமோகன் அவர்கள் 19-05-2002 அன்றும், திரு. டி. கர்சா கவுடர் அவர்கள் 22-05-2002 அன்றும், திரு. கி. சட்டநாத கரையாளர் அவர்கள் 14-6-2002 அன்றும், திரு. கோ. இளங்கோ அவர்கள் 14-08-2002 அன்றும், திரு. கோ. சண்முகம் அவர்கள் 21-09-2002 அன்றும், திரு. ச.க. சுப்பிரமணியம் அவர்கள் 19-10-2002 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. சி. மன்னியப்பன் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வி. பழனிவேல் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கோ. பாரதிமோகன் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை குத்தாலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. டி. கர்சா கவுடர் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை உதகமண்டலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. கி. சட்டநாத கரையாளர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலும் மீண்டும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் தென்காசி தொகுதியிலிருந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. கோ. இளங்கோ அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை அவினாசி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கோ. சண்முகம் அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செம்மையாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. ச.க. சுப்பிரமணியம் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை சத்தியமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்களுடைய மறைவினால் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)